ISSN: 2320-4842 (Print)
ISSN: 3049-2688 (Online)

Arimaa Nokku
20:02:APR-JUN-2026

# அரிமா நோக்கு

# ARIMAA NOKKU



ICSSR New Delhi, has awarded a grant to the "Arima Nokku" for the year 2025-2026.

மொழி, இலக்கியம், கலை, பண்பாடு, வரலாறு, மெய்யியல், அறிவியல்சார் பண்பாட்டுக் காலாண்டிதழ்.

INTERNATIONAL QUARTERLY ON LANGUAGE, LITERATURE, ART, CULTURE AND SCIENCE

International Research Journal Since 2007.
Peer Reviewed Refereed, International Journal

International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

அரிமா நோக்கு
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

ISSN: 3049-2688 (Online)

அரிமா நோக்கு
20 : 2 ஏப்ரல் - ஜூன் 2026

ஆசிரியர்
தமிழ்ச் செம்மல்
பேராசிரியர் முனைவர்
இரா. பன்னிருகைவடிவேலன்

ஆசிரியர் குழு
நா. கணேசன் (அமெரிக்கா)
நா. சுப்பிரமணியன் (கனடா)
பொன். செல்வகணபதி
ஒப்பிலா மதிவாணன்
சீதாலட்சுமி (சிங்கப்பூர்)
மு. பரமசிவம் (மலேசியா)
அப்பாசாமி முருகையன் (பிரான்ஸ்)
வெ. முருகன்
மனோன்மணி தேவி (மலேசியா)
பத்மாவதி விவேகானந்தன்
மருதூர் அரங்கராசன்
பெ. இலக்குமிநாராயணன்
கோ. பழனி
மு. வையாபுரி
சி. சிதம்பரம்
பா. விஜயகுமார்
ஹெப்சி ரோஸ் மேரி
ச. திருநாவுக்கரசு
ப. குமார்
கி. துர்காதேவி
உ. கருப்பத்தேவன்

ஓவியர்
சுபா. முனிவேல்
அ. கார்த்திக் தங்கராஜன்

அறிவுரைக் குழு
இந்தியாவிலும் அயல் நாடுகளிலும் உள்ள தமிழியல் அறிஞர்கள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் மற்றும் படைப்பாளிகள்

பதிப்பாசிரியர்
இரா. பன்னிருகைவடிவேலன்
+91 91766 30415

# பொருளடக்கம் CONTENTS

குடியேறிய தமிழர்களும்; குறிஞ்சி நிலக் கடவுளும்
(Lord Muruga: The Soul of Tamil Heritage in the Global Diaspora)
Prof. Paramasivam Muthusamy 5-10

சங்க இலக்கியம் குறிப்பிடும் கலனில் வம்பலர்
அ. சகாய ஜெசி கலா 11-14

அண்டனூர் சுராவின் சிறுகதைகளில் காணப்படும் கண்டுபிடிப்புகளில் புதுமைகள்
க. செங்கொடி - ந. கிருஷ்ணவேணி 15-19

புரட்சிக் கவிஞர்கள் வலியுறுத்திய சாதி ஒழிப்பும், சமத்துவமும்
கொ. அஞ்சாயி - பா. திருஞானசம்பந்தம் 20-24

மாந்தரஞ்சேரல் மெய்க்கீர்த்தியும் வேளிர்களும்
கோ. லோகநாதன் - இரா. குணசீலன் 25-28

குறுந்தொகையில் திணைசார் நீரியல் சூழலியம்
ச. ஷோபனா - எ. சுசான் மரி நெப்போலியன் 29-34

தேர் நாவலில் மூடநம்பிக்கை மற்றும் சடங்குகள்
சு. அன்பு கங்கேஸ்வரன் - முனைவர் க. பூபதி 35-38

கலைஞர் மு.கருணாநிதியின் கவிதைகளில் அறச்சீற்றம்
செ. எழில்வளவன் - சோ.கண்ணதாசன் 39-45

கலித்தொகையில் ஒன்றொழிப் பொதுச்சொல்
செ. வசந்தி - ப. அலிஸ் ராணி 46-49

குறுந்தொகையில் சமூக பண்பாட்டு ஆய்வு நோக்கில் மருதப் பெண்கள் - க. கவியரசன் - கரு. முருகன் 50-53

குறிஞ்சி நில மக்களின் உணவுப் பண்பாடு
சே. ஆனந்த ஷைனி - சௌ. கீதா 54-55

சிலப்பதிகாரத்தில் யாழ் - சோ. வெண்ணிலா - நா. மாலதி 56-59

சோலை சுந்தரபெருமாள் சிறுகதைகளில் வண்டல் வட்டாரச் சொற்கள் - பூ.பகலவன் - அ.இருதயராஜ் 60-63

திருவாசகம் கூறும் இறைச் சிந்தனைகள் - பொ. சாந்தி 64-67

வ. உ. சிதம்பரம் பிள்ளை கட்டுரைத்திறம்
ம. தாமரைச் செல்வி 68-75

அகத்திணைக் கோட்பாடும் சங்க அகப் பாடல்களும்
மா. ஜெயசங்கர் 76-80

சு.தமிழ்ச்செல்வியின் படைப்புகளில் புவிசார் சூழலில் பொருள்சார் வாழ்வியல் - அ. சிந்தியா தேவி - மு. சுதா 81-85

கிருஷ்ணகிரி வட்டார நாட்டுப்புற இல்லம் சார்ந்த புழங்கு பொருட்கள் - மா. உமா மகேஸ்வரி - கா.காந்தி 86-90

பிர.ஃபுல்லா ராயின் புரட்சிக்காலம் நாவல் – ஒரு மதிப்பீடு
மு. சத்தியா 91-97

சங்க அகப்பாடல்களும் பாணர் பதிவுகளும் - ப. கோமளா 98-102

கவிஞர் மு. மேத்தாவின் கண்ணீர்ப் பூக்கள் படைப்பில் அரசியலும் காந்தியமும் - ரெ. ராதிகா 103-105

**International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal**
**ISSN: 2320-4842 (Print)** **ISSN: 3049-2688 (Online)**

அரிமா நோக்கு
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

**ISSN: 3049-2688 (Online)**

அரிமா நோக்கு
20 : 2 ஏப்ரல் - ஜூன் 2026

*ஆசிரியர்*
தமிழ்ச் செம்மல்
பேராசிரியர் முனைவர்
இரா. பன்னிருகைவடிவேலன்

*ஆசிரியர் குழு*
நா. கணேசன் (அமெரிக்கா)
நா. சுப்பிரமணியன் (கனடா)
பொன். செல்வகணபதி
ஒப்பிலா மதிவாணன்
சீதாலட்சுமி (சிங்கப்பூர்)
மு. பரமசிவம் (மலேசியா)
அப்பாசாமி முருகையன் (பிரான்ஸ்)
வெ. முருகன்
மனோன்மணி தேவி (மலேசியா)
பத்மாவதி விவேகானந்தன்
மருதூர் அரங்கராசன்
பெ. இலக்குமிநாராயணன்
கோ. பழனி
மு. வையாபுரி
சி. சிதம்பரம்
பா. விஜயகுமார்
ஹெப்சி ரோஸ் மேரி
ச. திருநாவுக்கரசு
ப. குமார்
கி. துர்காதேவி
உ. கருப்பத்தேவன்

*ஓவியர்*
சுபா. முனிவேல்
அ. கார்த்திக் தங்கராஜன்

*அறிவுரைக் குழு*
இந்தியாவிலும் அயல் நாடுகளிலும் உள்ள தமிழியல் அறிஞர்கள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் மற்றும் படைப்பாளிகள்

*பதிப்பாசிரியர்*
இரா. பன்னிருகைவடிவேலன்
+91 91766 30415

# பொருளடக்கம் CONTENTS

சு. தமிழ்செல்வி நாவல்களில் விளிம்பு நிலைப் பெண்களின் சமூக வாழ்வியல் நிலை - மை. ஜெயதெரசா - மு. விஜயகுமார் 106-111

இமையத்தின் கோவேறு கழுதைகள் புதினத்தில், வண்ணார் சமூகத்தின் வாழ்வியல்
ர. பிரசாந்த் - பா. திருஞானசம்பந்தம் 112-117

சங்ககாலத் தலைவியின் ஆளுமைப்பண்பு-ஏ. மா. கவிதா 118-123

சுகிர்தராணி கவிதைகளில் தலித் பெண்ணியம்
சே. ஜெயபிரகாஷ் - அ. கலைச்செல்வி 124-127

சைவ சித்தாந்த சாத்திரங்கள் – கொடிக்கவி
கி. துர்காதேவி 128-131

சங்ககாலச் சமூகத்தில் பெண் இருத்தலியல்
கு. சிவப்பிரகாசம் 132-135

கிளைமொழிகளும் - வட்டார வழக்குச் சொற்களும்
பா. மேகலா 136-138

மதுரைக் காஞ்சியில் 'நிலையாமை'
ஜெ. ப்ரீத்தா - க. இராதாகிருஷ்ணன் 139-142

தி. ஜானகிராமன் சிறுகதைகளில் குழந்தைகள்
பா. அய்யாசாமி - துரை. கார்த்திகேயன் 143-145

செந்தூரச்சாரல் நாவலில் வாழ்வியல் சிக்கல்கள்
ரா. சக்தி - த. மு. ஆனந்த் 146-149

இமையம் செல்லாதபணம் கிராம வாழ்க்கைச் சித்தரிப்பு
வெ. நித்யா - ச. பிரியா 150-155

தொல்காப்பியர் சுட்டும் அகப்பொருள் மரபாக்கம்
வே. சிவராஜன் - பா. திருஞானசம்பந்தம் 156-161

கவிஞர் நா.முத்துக்குமார் வாழ்க்கை சுவடுகள்
ஜெ. சுவிதா 162-166

Discrimination as spring of Motivation: A Psychological reading in the Select Works of Helen Oyeyemi and Bapsi Sidhwa
K. Anukala - G. Priya 167-169

Torn Between Worlds: The Collision of Spiritual and Cultural Realities in The Orenda by Joseph Boyden
G.Lakshmi Priya - N.Gnanaselvi 170-173

The Sixth Finger Pedagogy: Kavikko Abdul Rahman's Educational Philosophy and Social Critique in Modern Tamil Poetry
G. Ranganathan - C. Mohamed Faheem 174-176

Eco feminist Perspective in Mahasweta by Sudha Murty
N.Jessie Deva Priya - K.Muthamil Selvi 177-179

Beyond Enlightenment: Intersex, Performativity, and the Persistence of Gender Myths in Middlesex
M.Anandha Jothi - A.Padma Priya 180-182

International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

அரிமா நோக்கு
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)
ISSN: 3049-2688 (Online)
அரிமா நோக்கு
20 : 2 ஏப்ரல் - ஜூன் 2026

**ஆசிரியர்**
தமிழ்ச் செம்மல்
பேராசிரியர் முனைவர்
இரா. பன்னிருகைவடிவேலன்

**ஆசிரியர் குழு**
நா. கணேசன் (அமெரிக்கா)
நா. சுப்பிரமணியன் (கனடா)
பொன். செல்வகணபதி
ஒப்பிலா மதிவாணன்
சீதாலட்சுமி (சிங்கப்பூர்)
மு. பரமசிவம் (மலேசியா)
அப்பாசாமி முருகையன் (பிரான்ஸ்)
வெ. முருகன்
மனோன்மணி தேவி (மலேசியா)
பத்மாவதி விவேகானந்தன்
மருதூர் அரங்கராசன்
பெ. இலக்குமிநாராயணன்
கோ. பழனி
மு. வையாபுரி
சி. சிதம்பரம்
பா. விஜயகுமார்
ஹெப்சி ரோஸ் மேரி
ச. திருநாவுக்கரசு
ப. குமார்
கி. துர்காதேவி
உ. கருப்பத்தேவன்

**ஓவியர்**
சுபா. முனிவேல்
அ. கார்த்திக் தங்கராஜன்

**அறிவுரைக் குழு**
இந்தியாவிலும் அயல் நாடுகளிலும் உள்ள தமிழியல் அறிஞர்கள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் மற்றும் படைப்பாளிகள்

**பதிப்பாசிரியர்**
இரா. பன்னிருகைவடிவேலன்
+91 91766 30415

# பொருளடக்கம் CONTENTS

Exploring English Speaking Difficulties and ICT-Based Interventions in Tertiary ELT
M. Karunya - K. Muthamil Selvi 183-189

Kappa ga Nozoita Indo: A Japanese Multimodal Visual discourse narrative on India - M. V. Lakshmi 190-196

Alcohol and Substance usage among Transgender Youth in Rural Areas - A Qualitative Study
R. Mahendran - M. Arivanandan 197-199

Mythical Narratives and Scientific Paradigms: A Critical Study of Rational Discourse in Amish Tripathi s Shiva Trilogy
S.Gayathri - V.S. Shakila 200-202

Digital Transformation of English Language Education in SAARC: AI Adoption, Institutional Constraints, and Policy Reform
S. Nivetha - N. Kalaivani 203-211

Captivity, Care, and Narrative Power: Reading Annie Wilkes as a Subversion of the Ideal Reader
R. Sheeba Mary - Dr. N. Shanti 212-216

A Psychoanalytic Approach: Decoding the Human Psyche in Christina Dalcher s Vox
T. Divya Bharathy - S. Zahira Banu 217-223

Edible Fluidities: Water, Gender, and the Politics of Identity in Culinary Narratives
V. Deepika - J. Sobhana Devi 224-228

Reclaiming Memory and Identity: Indigenous Culture in Cherie Dimaline s The Marrow Thieves and Kim Scott s True Country
V. Vidhya Lakshmi - A. Padma Priya 229-231

தமிழர் வழிபாட்டில் பெண் தெய்வங்கள்
மு. ஜெய்குமார் 232-235

வ.உ.சிதம்பரம் பிள்ளை - திருக்குறள் உரை நெறி
க. விநாயகமூர்த்தி 236-239

சங்ககாலப் பண்பாட்டில் உயிர்ப்பலி - ம. ரம்யா 240-244

பெண்ணிய நோக்கில் குட்டி ரேவதி கவிதைகள்
மு. கயல்விழி - சொ. சுரேஷ் 245-248

ஆற்றுப்படை இலக்கியங்களில் போர்க் கருவிகள்
சி. வித்யா 249-252

கொங்கு வட்டார நாட்டுப்புறப் பாடல்களில் வாழ்வியல்
க. காமராஜ் - இரா.செல்வராஜு 253-257

International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)



அரிமா நோக்கு
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

# இராஜகுரு
# பேராசிரியர் வ. ஜெயதேவன் 1947–2026

## அகராதியியல் அறிஞர் பேராசிரியர் வ. ஜெயதேவன்

அகராதிப் பணியில் தன்னை இணைத்துக் கொண்டு, சொற்களோடு உறவாடி, தமிழின் புதிய சொல் ஆக்கங்களுக்குத் துணை நின்று, தமிழ் வளர்ச்சிக்காகத் தனது வாழ்வை முழுமையாக அர்ப்பணித்தவர் அகராதியியல் அறிஞர் பேராசிரியர் வ.ஜெயதேவன். அவரது இழப்பு தமிழ் மொழிக்கும் தமிழ் அறிஞர்களுக்கும் ஆய்வாளர்களுக்கும் பேரிழப்பாகும். தமிழோடு கலந்த அவரது வாழ்க்கை தமிழ் ஆய்வுலகிற்காக....

பேராசிரியர் வ.ஜெயதேவன் அவர்கள் திருச்சிராப்பள்ளி மாவட்டம் உப்பிலியபுரத்தில் திருவாளர்கள் வரதாரசன்-சரோசா ஆகியோர்க்கு மகனாகப் பிறந்தவர் (10.05. 1947). அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இளம் அறிவியல்-தாவரவியல் பயின்றவர் (1969). தமிழ் இலக்கிய முதுகலைப் பட்டத்தை அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பெற்றவர்(1971). மொழியியல் துறையிலும் பயின்று சான்றிதழ் பெற்றவர் (1970). அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக விளங்கிய இராமசாமியார், வ.சுப.மாணிக்கம், க.வெள்ளைவாரணனார், சுவாமி ஐயா, க.திருநாவுக்கரசு உள்ளிட்ட அறிஞர்களிடம் இவர் தமிழ் பயின்ற சிறப்புக்குரியவர் ஆவார்.

1979இல் முனைவர் ந.சஞ்சீவி அவர்களின் மேற்பார்வையில் முனைவர்பட்ட ஆய்வுக்குப் பதிந்து முனைவர் சி.பாலசுப்பிரமணியன் அவர்களின் நெறிப்படுத்தலில் ஆய்வு செய்து பட்டம் பெற்றவர்.

## பேராசிரியப் பணி

சென்னை விவேகானந்தர் கல்லூரியில் 1971இல் உரையாளராகத் தமிழ்ப்பணியைத் தொடங்கிய பேராசிரியர் வ.ஜெயதேவன், சென்னைப் பல்கலைக்கழகத்தில் (1973-89) தமிழ் விரிவுரையாளராகப் பணியில் இணைந்தவர். இணைப் பேராசிரியராகப் பணி உயர்வு (1984-89) பெற்றார். தமிழ்ப் பேராசிரியராக 1990இல் பணியுயர்வு பெற்ற வ.ஜெயதேவன் அவர்கள் 1997 முதல் தமிழ் மொழித்துறையின் தலைவராகப் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர். இவர் சென்னைப் பல்கலைக்கழக தமிழ் இலக்கியத்துறையின் தகைசால் பேராசிரியராகவும் பணியாற்றியுள்ளார். 30 மேற்பட்ட முனைவர்பட்ட ஆய்வு மாணவர்களுக்கு நெறியாளராக இருந்து நெறிப்படுத்தியுள்ளார்.

## அகராதிப்பணி

தொடர்ந்து வளர்முக நோக்கில் இருக்கும் தமிழ் அகராதியியல் துறையில், பேரறிவு பெற்றவராக விளங்கியவர். சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரகராதியின் மறுபதிப்பு முதன்மைப் பதிப்பாசிரிய ராகப் பணியாற்றியுள்ளார். அப்பணியின் போது, பேரகராதியில் வளர்ந்து வரக்கூடிய தமிழ் மொழியின் சொற்களை இணைப்பதோடு, பழந்தமிழ் இலக்கியச் சொற்களையும் விடுபடாமல் இணைத்து விரிவாக்குவதற்குப் பல சொல் தொகுப்பாளர்களுட னும், அறிஞர்களுடனும் இணைந்து அயராது பாடுபட்டவர். தானே சொல் தொகுப்பாளராக மாறி, தனது தொடர்ந்த வாசிப்பினால் பழைய இலக்கியங்கள், புதிய நூல்கள் ஆகியவற்றிலிருந்து, பல்வேறு சொற்களை நாள்தோறும் கண்டறிந்து பேரகராதியில் இணைத்திடப் பாடுபட்டவர்.

International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

# தோரணவாயில்

அரிமா நோக்கு
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

இரா. பன்னிருகைவடிவேலன்

பல்வேறு பணிகளில்...

* அரிமா நோக்கு, தமிழாய்வு, தமிழ்ச் சோலை இதழின் மதிப்புறு ஆசிரியராகவும் இணை ஆசிரியராகவும் சிறப்புடன் பணியாற்றியவர்.
* சென்னைப் பல்கலைக்கழகத்தின் பதிப்புத்துறை இயக்குநராக விளங்கினார். (1988-99)
* இந்திய அரசு, தமிழக அரசு அமைத்துள்ள பல கல்வி சார்ந்த குழுக்களில் உறுப்பினராகவும் தலைவராகவும் இருந்து திறம்படப் பணி புரிந்துள்ளார். அவ்வகையில் இந்திய அரசின் நடுவண் தேர்வாணையம் (UPSC), பல்கலைக்கழக நிதிநல்கைக் குழு (UGC), தேசிய கல்வி ஆராய்ச்சி நிறுவனம் (NCRT) தமிழக அரசின் பணியாளர் தேர்வாணையம் (TNPSC) ஆகியவற்றில் இவர் உறுப்பினராகவும் தலைவராகவும் இருந்து பலமுறை சிறப்பாகச் செயலாற்றினார்.
* தமிழ்வளர்ச்சிக்கழகம், சென்னைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்வளர்ச்சிப் பிரிவு ஆகியவற்றில் உறுப்பினராக இருந்து பணிபுரிந்துள்ளார்.

தனது பண்பு நலன்களாலும், பழகும் பாங்காலும், தமிழ், ஆங்கிலம் என்னும் இருமொழிப் புலமையாலும் தமிழ்ப் பேராசிரியர்கள் பலருக்கும் முன்னோடியாக மேம்பட்டு விளங்கியவர். கடுமையான உழைப்பும், தொடர்ந்த வாசிப்பும், துறைசார் அறிவும் கொண்டவர். இவரது ஆய்வுப் புலமாக அகராதியியல், தமிழ் பயிற்றுவித்தல், மொழியியல், பதிப்புத்துறை, இலக்கியத் திறனாய்வு உள்ளிட்டவற்றைக் குறிப்பிடலாம்.

பன்னாட்டளவில், தேசிய அளவில் நடைபெற்ற மாநாடுகள், கருத்தரங்குகளில் கலந்துகொண்டு ஆய்வுக்கட்டுரைகள் வழங்கியவர். இவர்தம் முனைவர் பட்ட ஆய்வேடு "தமிழ் அகராதியியல் வளர்ச்சி வரலாறு" நூலாக வெளிவந்துள்ளது.

தொல்காப்பிய அகராதி, சித்திரக்கவி களஞ்சியம், அணிகலன்கள் அகராதி, திவாகர நிகண்டு, நாமதீப நிகண்டு முதலான பல நிகண்டு அகராதிகள் உள்ளிட்ட பல நூல்களைப் பதிப்பித்தவர். இந்நூல்கள் என்றும் பேராசிரியரின் பெருமையைப் பேசும். இவர் 2013ஆம் ஆண்டு தமிழக அரசின் கி.ஆ.பெ. விருது பெற்றுள்ளார்.

கவிதையின்பால் மிக்க ஈடுபாடு கொண்டவர். இதற்குச் சான்றாக அரிய பல ஆங்கிலக் கவிதைகளைத் தேர்ந்தெடுத்து அவ்வப்போது தமிழாக்கம் செய்து முகநூலில் வெளியிட்டு வந்தமையைக் கூறலாம்.

கணினி, தொழில்நுட்ப வளர்ச்சி போன்றவற்றைப் பயன்படுத்தித் தமிழாய்வுகளிலும், தமிழ்ப் பயிற்றுவித்தலிலும் புதுமைகள் பல மேற்கொண்ட பேராசிரியரின் ஆய்வுப் பணிகள் தமிழர்களுக்கும் தமிழ்மொழி வளர்ச்சிக்கும் மகத்தானவை.

பிப்ரவரி 4ஆம் தேதி 79 வயதில் பேராசிரியர் வ.ஜெயதேவன் காலமானார். அகராதியியல் பேராசிரியராக விளங்கிய முனைவர் வ.ஜெயதேவன் அவர்களது மறைவு, தமிழ் அறிஞர்களுக்கும், தமிழ் ஆர்வலர்களுக்கும், பேரிழப்பாகும். இது தமிழ்ப் பேருலகில் நிரப்ப முடியாத வெற்றிடத்தை ஏற்படுத்தியுள்ளது.

Indian Council of Social Science Research

WE HEREBY ACKNOWLEDGE THE RECEIPT OF THE RESEARCH JOURNAL GRANT FROM INDIAN COUNCIL OF SOCIAL SCIENCE RESEARCH (ICSSR) NEW DELHI FOR GRANTING TO "ARIMA NOKKU" RESEARCH JOURNAL DURING 2025 - 2026.

# அரிமா நோக்கு

ஆசிரியர் – பதிப்பாசிரியர்
தமிழ்ச் செம்மல்
**பேராசிரியர் இரா. பன்னிருகைவடிவேலன்**
259 நேரு நகர், 2ஆவது முதன்மைச் சாலை, பழைய மகாபலிபுரம் சாலை
கொட்டிவாக்கம், சென்னை 600 096

***Prof. R. Pannirukaivadivelan***
**Arimaa Nokku, Editor-Publisher**
**259, Nehru Nagar, 2nd Main Road, Korrivakkam**
**OMR, Chennai 600 096, TamilNadu, India**
**https://arimanokku.com/**
மின்னஞ்சல்: **arimaanokkuu@gmail.com; info@arimanokku.com**
செல்பேசி: **+91 91766 30415**

**CHIEF ADMINISTRATIVE OFFICER**
***R. P. Mahesh***

**AUDITOR**
***V. S. Lakshmikantham CA***
***M. N. 225670***

# கட்டண விவரம்

| | | | |
|---|---|---|---|
| வாழ்நாள் கட்டணம் | ரூ. | 4000/-US | $ 175 |
| புரவலர் கட்டணம் | ரூ. | 6000/- US | $ 250 |
| பெரும் புரவலர் கட்டணம் | ரூ. | 10000/- US | $ 500 |
| மீப்புரவலர் கட்டணம் | ரூ. | 20000/- US | $ 1000 |
| நிறுவனம் சார் உறுப்பினர் (Institutional Membership) | ரூ. | 15,000/- US | $ 700 |

## விளம்பரக் கட்டணம்

| | | | |
|---|---|---|---|
| பின்னட்டை | (பல வண்ணங்கள்) | ரூ. | 15,000/- |
| உள்ளட்டை | (பல வண்ணங்கள்) | ரூ. | 10,000/- |
| முழுப்பக்கம் | (கருமை & வெண்மை) | ரூ. | 3,000/- |
| அரைப்பக்கம் | (கருமை & வெண்மை) | ரூ. | 1,500/- |

*கட்டணம் செலுத்த*

**ARIMA NOKKU** Payable at Chennai

**City Union Bank LTD., Current Account A/C 510909010253422, Branch: OMR Thoraipakkam, 600 097**

**IFSC: CIUB0000152**

**Gpay & PhonePe +91 91766 30415**

© 2007 Arimaa Nokku. All rights reserved.
© 2024 Arimaa Nokku

- All content on this website, including text, graphics, logos, and images, is the property of Arimaa Nokku unless otherwise stated.
- This document is intended for academic reference only. Proper citation is required for reuse of any part of this content.
- No part of this Journal to be produced in any form or by any means without publishers prior permission.
- Use of the journal title and or ISSN by any other entity without the publisher's written consent is not permitted.

Legal Warning

- The journal title "Arimaa Nokku" and the ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online), This ISSN officially registered.
- Any unauthorized use, misuse, duplication, or misrepresentation of the journal title and/or ISSN by any other journal, website, publisher, or individual constitutes a serious ethical and legal violation and will be dealt with under applicable laws.

## பொறுப்புத் துறப்பு / Disclaimer

அரிமா நோக்கு பன்னாட்டு ஆராய்ச்சி இதழில் வெளியிடப்பட்ட கட்டுரைகளில் உள்ள தரவுகள் மற்றும் கருத்துகள் கட்டுரை ஆசிரியர்களின் தனிப்பட்ட கருத்துகளே. ஆய்வுக் கட்டுரையின் கருத்துகள், ஆதாரங்கள், மேற்கோள்கள் மற்றும் பலவற்றின் உண்மைத் தன்மை உட்பட, கட்டுரையில் உள்ள அனைத்து உள்ளடக்கங்களுக்கும் கட்டுரை ஆசிரியர்களே பொறுப்பாவார்கள்.

International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

முனைவர் ச. திருநாவுக்கரசு
முதல்வர்
ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ்,
கலை, அறிவியல் கல்லூரி, மயிலம்.
[அரசு உதவிபெறும் கல்லூரி]
விழுப்புரம் மாவட்டம் - 604 304



தொடர்பு எண் : 9443906003 மின்னஞ்சல் : nsthirunavukkarasu73@gmail.com

# அகராதியியல் அறிஞர் பேராசிரியர் முனைவர் வ. ஜெயதேவன்

தமிழ்மொழியின் செழுமை அதன் சொல்வளத்தில் திகழ்கிறது. அதனைச் செம்மைப்படுத்தி, தலைமுறைகளுக்குப் பரப்பும் பணியில் அகராதியியல் அறிஞர்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றனர். இத்தகைய உயரிய துறையில் தன்னுடைய ஆயுள் முழுவதையும் அர்ப்பணித்து, தமிழ்க்கல்விக்கும் தமிழாய்வுக்கும் ஒளி விளக்காக விளங்கியவர் முனைவர் வ.ஜெயதேவன். அவருடைய மறைவு தமிழுலகிற்கு ஒரு பெரும் இழப்பாகும். அவரை நினைவுகூரும் இந்நேரத்தில்,அவருடைய வாழ்க்கைச் சாதனைகளையும் பண்புகளையும் சிந்தனைக்குக் கொண்டு வருவது நம் கடமையாகும்.

சென்னை விவேகானந்தர் கல்லூரியில் தமிழ்ப் பணியைத் தொடங்கிய பேராசிரியர், சென்னைப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகச் சேர்ந்தார். தனது உழைப்பாலும் அறிவாலும் பேராசிரியர் நிலைக்கு உயர்ந்தார். தமிழ்த்துறையின் தலைவராகப் பணியாற்றி, கல்வித்துறையில் வழிகாட்டியாக விளங்கினார். முப்பதுக்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு முனைவர் பட்ட ஆய்வில் வழிகாட்டி, தமிழறிவைத் தலைமுறைகளுக்குப் பரப்பிய பெருமை அவருக்கே உரியது. பல இளம் ஆராய்ச்சியாளர்களுக்கும் வழிகாட்டியாக இருந்தார். அவரது மாணவர்களில் பலர் இன்றைக்குத் தமிழ்த்துறையில் முக்கியமான இடங்களை வகிப்பது, அவருடைய கல்விசார் தாக்கத்தை வெளிப்படுத்துகின்ற நிலையில் யானும் அவருடைய மாணவன் என்பதைப் பெருமையோடு நினைத்துப் பார்க்கின்றேன்.

தமிழ் அகராதியியல் வளர்ச்சியில் வ.ஜெயதேவன் அவர்களின் பங்களிப்பு அளப்பரியது. சொல்லின் பொருள், அதன் பயன்பாடு, இலக்கணத் தொடர்பு ஆகியவற்றை ஆழமாக ஆராய்ந்து, அகராதித்துறையில் புதிய பார்வையை உருவாக்கினார். அவரது முக்கியமான ஆய்வு நூலான **தமிழ் அகராதியியல் வளர்ச்சி வரலாறு** இத்துறையில் ஒரு மைல்கல்லாகும். தமிழ்ப்பேரகராதியின் மறுபதிப்பு பணியில் முதன்மைப் பதிப்பாசிரியராகச் செயல்பட்டு, பழமையும் புதுமையும் இணைந்த அகராதிப் பணியை முன்னெடுத்தார். கணினி மற்றும் இணையம் போன்ற நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி தமிழாய்வை முன்னேற்ற நினைத்த முன்னோடி அறிஞர் அவர்.

அகராதியியல் மட்டும் அல்லாது, இலக்கணம், பாட்டியல், மொழியியல், நாட்டுப்புறவியல், இலக்கியத் திறனாய்வு போன்ற பல துறைகளிலும் அவருடைய புலமை விரிந்தது.

இந்திய அரசு மற்றும் தமிழக அரசின் பல்வேறு கல்விக் குழுக்களில் உறுப்பினராகவும் தலைவராகவும் இருந்து, கல்விக் கொள்கை வளர்ச்சிக்குப் பங்களித்தார். UPSC, UGC, NCERT, TNPSC போன்ற அமைப்புகளில் அவரது பணி குறிப்பிடத்தக்கது. மேலும், சர்வதேச அளவிலும் தமிழ் மற்றும் அகராதியியல் துறையை எடுத்துச் சென்றவர். சிங்கப்பூர், மொரீசியஸ், மலேசியா போன்ற நாடுகளுக்குச் சென்று தமிழ்க்கல்வி வளர்ச்சிக்குப் பங்களித்தார்.

பேராசிரியர் அவர்கள் அறிவில் மட்டுமல்ல, பண்பிலும் உயர்ந்தவர். எளிமை, அன்பு, ஒழுக்கம் ஆகியவை அவருடைய வாழ்வின் அடையாளங்களாக இருந்தன. மாணவர்களிடம் அன்புடன் பழகி, அவர்களின் முன்னேற்றத்தை தன் முன்னேற்றமாகக் கருதியவர்.

இன்று அவர் நம்மிடையே இல்லாவிட்டாலும், அவரது ஆய்வுகள், நூல்கள், மாணவர்கள், கல்விசார் பணிகள் ஆகியவை அவரை நிலைநிறுத்துகின்றன. தமிழின் சொல்வளத்தைச் செழுமைப்படுத்திய அவரது பணிகள் என்றும் அழியாது. பேராசிரியர் முனைவர் வ. ஜெயதேவன் அவர்கள் ஒரு சாதாரண அறிஞர் அல்லர்; தமிழ்மொழியின் உயிரோட்டத்தை உணர்ந்த, அதனை உலகளவில் உயர்த்த எண்ணிய ஒரு மொழிச் சிந்தனையாளர். அவருடைய மறைவு ஒரு காலத்தின் முடிவாக இருந்தாலும், அவர் விதைத்த அறிவு விதைகள் ஆயிரம் தலைமுறைகளில் முளைக்கும்.

அவரது நினைவு தமிழின் ஒவ்வொரு சொல்லிலும் வாழும்;
அவரது பணி தமிழரின் உள்ளங்களில் என்றும் நிலைத்திருக்கும்;
அறிஞர் மறைவது இல்லை; அவர் அறிவாகவே நிலைத்திருப்பார்.

Published on 14, April - June 2026 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# சொல்லொடு கலந்த சுடர்

**முனைவர் ஜா. கிரிஜா**
உதவிப் பேராசிரியர்
ஆசான் நினைவு கலை மற்றும் அறிவியல் கல்லூரி
சென்னை 600 100

சொற்குகைக்குள் புகுந்து நெடுங்கணக்கு மத்து பிடித்து
அகரத்தின் வேரில் அமிழ்து கடைந்து
அகிலம் போற்ற அறிவுத் தமிழ்க் கடலில்
நீச்சல் பழகிய
சொல்லகராதி சூரியரே!
சென்னைப் பல்கலைக்கழக மொழித்துறையில் தவம் செய்து
நிகண்டின் வாயில் திறந்து
மறைந்த முத்துச் சொற்களை
மணித்திரை போல வெளிக்கொணர்ந்தவரே
அகராதி உலகில்
அச்சமின்றி
ஒளிரும் ஒற்றை நட்சத்திரமே
புன்னகை மாறாப் பேராசானே
விண்ணகம் சென்றது ஏனோ?
சொல்லின் வேரைத் தேடி விண்ணகம் சென்றாயோ?
எழுத்துக்களின் வேர் தேடிப் போனாயோ?
எங்கள் இதயத்துத் துடிப்பையெல்லாம்
ஏடுகளாய் மாற்றிவிட்டுப் போனாயோ?
அழுத்தும் சுமைகளை ஆறாம் விரலுக்குள் புகைத்தவரே
புகைவாசம் தேடி நூல்களும் ஏங்கித் தவிக்கின்றவே
அகரவரிசைப் படுத்தினாய் சொற்களை
அழுதுகொண்டே தேடுகிறோம்
ஆசானே
எந்த அகராதிப் பக்கத்தில் ஒளிந்து கொண்டாய்?
பல்கலைக்கழகத்தின் படிக்கட்டுகள்
உன் பாதம் தேடிக் காத்திருக்கிறதே
சொல்லிக் கொடுத்த உன் சொற்களெல்லாம்
சொல்லொணாக் கதையாய் அணிவகுத்து நிற்கின்றனவே!
அணிந்துரை வாழ்த்துரை வேண்டுவோர்
கடைவாயிலில் காத்துக்கிடக்கின்றனரே!
முனைவர் பட்டங்கள் உன் வாய்மொழிக்காகத்
தவம் கிடக்கின்றவே
பிற மொழிகளெல்லாம் உன் இலக்கிய நயம் காணாமல்
விம்முகின்றவே
பேரக்குழந்தைகளின் எழுதுகோல்கள்
கலங்கரை விளக்கம் சரியக்கண்டு துடிக்கின்றவே
கடல் போன்ற அறிவைச் சுமந்து நின்றாயே
கரையோரம் எங்களை நிறுத்திச் சென்றாயே!
மண்ணை விட்டு நீ மறைந்தாலும் - தமிழின்
சொற்துளியில் உன் முகம் தெரியுதே
அகராதி மகுடம் சூட்டிய தலைமகனே
மாணவர் நெஞ்சில் நிலைத்துக்
காலத்தின் ஏடுகளில் என்றும் அழியாப் புகழடைந்தாய்!

International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

Published on 14, April - June 2026 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# அணையா விளக்கு
# பேராசிரியர் வ. ஜெயதேவன்

**முனைவர் இரா. அனுராதா**
இணைப் பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர்
இராணி மேரி கல்லூரி, (தன்னாட்சி) சென்னை - 04

தமிழ் ஆய்வு உலகில் அழியாத தடம் பதித்த பேராசிரியர் வ.ஜெயதேவன் அவர்கள் நினைவில் **எம்மாழ்கும்** மரியாதையுடன் இம்மடல்.

ஆய்வாளராகவும், ஆய்வு நெறியாளராகவும் திகழ்ந்து பல்வேறு துறைகளில் ஆழ்ந்த பங்களிப்புகளைச் செய்தவர் அவர். அகராதிகள் பதிப்பித்ததன் மூலம் தமிழ் மொழியின் செழுமையையும் பரப்பையும் விரிவுபடுத்திய அவரது பணி, என்றும் நிலைத்திருக்கக் கூடியது. கல்வித்துறையில் அவர் காட்டிய அர்ப்பணிப்பும் ஒழுக்கமும் எண்ணற்ற ஆய்வாளர்களுக்கும் ஆசிரியர்க ளுக்கும் வழிகாட்டியாக அமைந்துள்ளது.

தனக்கெனவும் தம் குடும்பத்திற்கெனவும் வாழாமல், தமிழ் வளர்ச்சிக்காகத் தம்மை முழுமையாக அர்ப்பணித்த அரிய மனிதர் அவர். ஆய்வாளராகவும், ஆய்வு நெறியாளரா கவும் திகழ்ந்து, பல தலைமுறைக் கல்வியாளர்களை உருவாக்கிய பெருமை அவருக்குரியது.

அகராதிகள் பதிப்பித்ததன் மூலம் தமிழ் மொழியின் செழுமையையும் பரப்பையும் விரிவுபடுத்திய அவரது பணி, காலம் கடந்தும் நிலைத்திருக்கும். மாணவர்களை வழிநடத்தும் அவரது அர்ப்பணிப்பும், அறிவைப் பகிர்ந்தளிக்கும் உயர்ந்த பண்பும் அவரை ஒரு சிறந்த கல்வியாளராக உயர்த்தின.

நல்ல குணநலன்களால் அனைவரின் உள்ளத்தையும் வென்றவர் அவர். அவரின் வழிகாட்டுதலால் உருவான பல ஆசிரியர்கள் இன்று கல்வி உலகில் சிறப்பாகப் பணியாற்றி வருகின்றனர் என்பதே அவரது வாழ்வின் பெரும் சாதனையின் சான்றாகும்.

இன்று அவர் உடலால் எம்முடன் இல்லா விட்டாலும், அவர் விதைத்த அறிவும், உருவாக்கிய மாணவர்களும், பதிப்பித்த நூல்களும் என்றும் உயிரோடு வாழ்ந்து கொண்டே இருக்கும்.

* குருவாக அவர் இருந்த நிலை உயர்ந்தது, அரியதும் ஆகும்.
* அறிவை மட்டும் வழங்கியவர் அல்லர்; அறிவோடு வாழ்வியல் நெறியையும் விதைத்தவர்.
* அவரது சொற்கள் பாடமாக மட்டுமல்ல, பாதையாகவும் அமைந்தன.
* மாணவர்களின் எண்ணங்களை செம்மைப்படுத்தி, உள்ளங்களை உருவாக்கிய உன்னத குரு அவர்.
* ஒழுக்கம், பணிவு, அர்ப்பணிப்பு ஆகியவற்றை வாழ்வில் நடைமுறையாகக் காட்டிய முன்னுதாரணம்.
* ஒரு குருவின் தாக்கம் எவ்வளவு ஆழமோ, அதனை தனது வாழ்க்கையால் நிரூபித்தவர்.
* அவர் இன்றில்லை; ஆனால் அவர் கற்றுத்தந்த ஒளி,
* அவரது மாணவர்களின் வாழ்வில் என்றும் அணையாமல் எரிந்து கொண்டே இருக்கும்.

அவரது நினைவு என்றும் நிலைத்திருக்கட்டும்.

- என்றும் மரியாதையுடன்,

International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

Published on 14, April - June 2026 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# நினைவில் நிலைத்த நித்திலம் (2006–2026)

(முனைவர் வ. ஜெயதேவன்)

**முனைவர் ஜா. கீதா**
உதவிப் பேராசிரியர்
தமிழ்த்துறை (தந்நிதிப் பிரிவு), எத்திராஜ் மகளிர் கல்லூரி
சென்னை 600 008

ஓர் ஆசிரியர் என்பவர் பாடம் புகட்டுபவராக மட்டும் இல்லாமல், வாழ்க்கையை வடிவமைக்கும் வழிகாட்டியாகவும் அமைகிறார். எனது வாழ்க்கையில் அத்தகைய அரிய இடத்தைப் பெற்றவர் எமது பேராசிரியர். சென்னைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் மொழித்துறையில் 2006ஆம் ஆண்டு ஆய்வியல் நிறைஞர் பட்டத்திற்காகச் சேர்ந்தேன்.

**மாநாடுகளும் கருத்தரங்கங்களும்**

பல மாநாடுகளையும் கருத்தரங்குகளையும் திட்டமிட்டப்படி நிகழ்த்திக்காட்டியவர். 2007ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் தமிழ் மொழித்துறையும் தமிழாய்வு மன்றமும் இணைந்து பன்னாட்டுக் கருத்தரங்கம் நிகழ்த்தியது. இதில் நூல் தொகுப்புப் பணியின் போது மெய்ப்பு திருத்துவ தற்காக என்னையும் எனது சகோதரியையும் அழைத்தார். ஆறு மணி தாண்டியும் வேலைகள் நடந்தன. அப்போது ஆசிரியரின் மெய்ப்பு திருத்தும் பணியினையும் கருத்தரங்க கட்டுரை களைச் செப்பம் செய்வதையும் கணினியில் பக்க வடிவமைப்பு செய்வதையும் கண்டு வியப்படைந் தேன். இதே ஆண்டில் தமிழாய்வு மன்றம் சார்பாக இன்னொரு பன்னாட்டுக் கருத்தரங்கமும் ஆய்வுக்கோவை ஐந்து தொகுதிகளும் வெளியிடப் பட்டன.

2007ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஏசியா லெக்ஸ் (ASIALEX 2007) மாநாடு மயிலாப்பூரில் உள்ள சவேரா ஹோட்டலில் வைத்து நடைபெற்றது. இம்மாநாட்டில் அமெரிக்கா ரஷ்யா போன்ற மேல்நாட்டு பல அகராதியில் ஆய்வு அறிஞர்கள் கலந்து கொண்டனர். தமிழ்நாட்டில் உள்ள பல பல்கலைக்கழகப் பேராசிரியர்களும் பல நகரங்களில் இருந்த அகராதியியல் அறிஞர்களும் கலந்து கொண்டனர். இதில் தமிழ்ப் பேரகராதித் திருத்தப் பணித்திட்டத்தில் பணியாற்றும் அனைத்து ஆய்வாளர்களும் கலந்து கொண்டு பயனடைந்தனர். இம்மாநாட்டின் வாயிலாக அகராதியியல் வரலாற்றினையும் அகராதி தொகுப்புப் பணியினையும் அகராதிகளின் அமைப்புக்கேற்பத் தலைச்சொல் பதிவு வேறுபாட்டையும் கற்று உணர்ந்தேன்.

2010ஆம் ஆண்டு கோவையில் நடந்த செம்மொழி மாநாட்டிற்கான மாநாட்டுப் பணிகள் சென்னையில் நடைபெற்றது. அதில் எமது பேராசிரியர் பங்கு அளப்பரியது. அந்தக் காலங்களில் தஞ்சை பல்கலைக்கழக துணைவேந்தர் மா. ராஜேந்திரன் அவர்களும் செம்மொழித் தமிழாய்வு நிறுவனத் தின் இயக்குநர் க.இராமசாமி போன்ற பல அறிஞர்களோடு இணைந்து எங்கள் பேராசிரியர் மாநாட்டுத் திட்டங்களையும் மாநாட்டு நூல் உருவாக்குவதிலும் பங்காற்றினார். இப்பணிகளி லும் சிறு துரும்பாய்ச் செயல்புரிந்தேன்.

**நூல் சேகரிப்பு**

உ.வே.சா. நூலகம் தொடங்கிச் சென்னையில் உள்ள அனைத்து நூலகங்களிலும் உள்ள அரிய நூல்களைப் படியெடுத்துச் சேகரித்தார். லண்டன் நூலகத்திலிருந்து சிந்தாமணி நிகண்டு படி எடுத்து நூலாக்கினார். அரிய நூல்களையும் நகலெடுத்து வைத்து அவற்றில் இருக்கக்கூடிய சொற்களை எல்லாம் அகராதியில் சேர்க்க வேண்டும் என்று முனைப்போடு செயல்பட்டார். அவற்றிகெல்லாம் எங்களை உறுதுணையாகப் பயன்படுத்தினார். தமிழ்ப்பேரகராதித் திருத்தப் பணித்திட்ட நூலகத்தில் உள்ள நூல்களை யார் எடுத்துச் சென்றாலும் நினைவு வைத்துக் கொண்டு திருப்பி வாங்கி விடுவார்.

**அகராதியியல் ஆர்வம்**

பேராசிரியர் அகராதியியலில் மிகுந்த ஈடுபாடு உடையவர். சில பணிகளின் நிமித்தமாக

வெளியூர் செல்லும்போதெல்லாம் அங்குப் புழங்கக்கூடிய சொற்களை எல்லாம் திரட்டிக் கொண்டுவந்து தமிழ்ப்பேரகராதியில் பதிவாகச் சேர்ப்பார். அது மட்டுமன்றிப் பல நூல்களில் இருந்து ஒவ்வொரு நாளும் குறிப்பெடுத்துக் கொண்டு வந்து அவற்றையெல்லாம் சேர்க்க வேண்டும் என்று அவர் கைப்பட எழுதிக் கொடுப்பார். இணைச்சொல் அகராதி, எதிர்ச் சொல் அகராதி போன்ற பலவகைகளை உருவாக்குவதற்கு மாணவர்களைத் தூண்டுவார். பேராசிரியர் லெமன் டீ சாப்பிடும் பழக்கம் உடையவராக இருந்தார். அந்தத் தேநீரை எனது கையால் பலமுறை கொடுத்திருக்கிறேன். அவர் அகராதிப்பணியில் ஓய்வின்றி உழைத்தவர்.

### பேராசிரியரின் இலக்கிய ஆர்வம்

ஒரு தலைசிறந்த அகராதியியல் ஆய்வு அறிஞராக அறியப்படும் எங்கள் பேராசிரியர் இலக்கியத்திலும் மிகுந்த ஈடுபாடு உடையவர். பல கவிதைகள், சிறுகதைகள் நாவல்கள் எனத் தொடர்ந்து வாசிக்கும் பழக்கமுடையவர். அவற்றிலிருந்து புதிய சொற்களைத் தேர்ந்தெடுக்கும் நோக்கில் வாசித்தாலும் கூட அந்தக் கதையின் பின்புலத்தையும் கதை மாந்தர்களோடும் சேர்ந்து பயணிப்பவர். அதற்குச் சான்றாக எழுத்தாளர் சா.கந்தசாமி ஐயா வந்துவிட்டால் பல நிமிடங்கள் கதைகளின் பின்புலம், கதாசிரியனின் எழுத்துப்புலமை இலக்கியத்திற்கும் சமூகத்திற்கும் உள்ள தாக்கம் போன்றவற்றையெல்லாம் மிக காரசாரமாக ரசனையோடு மகிழ்ச்சியாக ரசித்து உரையாடு வார். பல கவிதைகள் எழுதுவதோடு மொழி பெயர்த்தும் ரசிப்பார்.

### சிறந்த ஆய்வு வழிகாட்டி

சென்னை, தஞ்சை, கோவை போன்ற நகரங்களில் உள்ள பிற கல்லூரி ஆய்வு மாணவர்கள் பேராசிரியரைச் சந்திக்க வருவர். அம்மாணவர் களின் ஆய்வு குறித்த ஐயங்களையும் முன்னோடி ஆய்வையும் ஆய்வேட்டு அமைப்பு முறைகளை யும் தெளிவுப்படுத்துவார். ஒரு ஆய்வு திட்டத்தை உருவாக்குவதற்குரிய அனைத்து வழிமுறைகளை யும் சிறப்பாகச் செய்து காட்டுவார். ஒவ்வொரு ஆய்வாளர்களுடைய ஆய்வுப்படியினையும் குறைந்தது மூன்று முதல் ஐந்து முறை திருத்தம் செய்து கொடுப்பார். எனது ஆய்விற்காக முதலில் கம்பராமாயணத்தைச் சொல்லடைவு செய்ய வேண்டும் என்று கூறிய போது நான் சற்றுத் தயக்கம் காட்டினேன். சரி உங்களுக்கு பிடித்த தலைப்பு எடுத்துக் கொண்டு வாருங்கள் என்று கூறினார். பின்னர் சொல்லிலக்கணம் குறித்து ஆய்வு செய்யலாம் என்று குறிப்பிட்டபோது இடைச்சொல் ஆய்வு அருகிக் காணப்படுகிறது அதைச் செய்யுமாறு பணித்தார். எனது ஆய்வுக் காலங்களில் பேராசிரியர் எந்த எதிர்ப்பார்ப்பும் இன்றி மிகுந்த அன்புடனும் அக்கறையுடனும் வழிகாட்டினார். மூர்த்தி ஐயா, முருகேசன் ஐயா போன்ற முன்னோடி ஆய்வாளர்களைச் சந்திப்ப தற்கும் வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்தார். 2014ஆம் ஆண்டு முனைவர் பட்டம் பெற்றேன்.

பேராசிரியரிடமிருந்து தமிழ்ப்பேரகராதித் திருத்தப் பணித்திட்டத்தில் கற்றவை ஏராளம். அதுமட்டும் இன்றிப் பாவாணர் அகராதி, சாம்பசிவம் பிள்ளை யின் மருத்துவ அகராதி, செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகராதி, ஞானப்பிரகாசர் அகராதி, மோனியர் வில்லியம் சமசுகிருத அகராதி போன்ற அகராதிகள், அரிய நூல்கள் போன்றவை ஒரே இடத்தில் படிக்கவும் குறிப்பெடுக்கவும் முடிந்தது. மேலும் பல அறிஞர்களை நேரில் சந்தித்து உரையாடும் வாய்ப்பையும் பெற்றேன். இவை என் வாழ்வில் கிடைத்த பெரும்பேறாகக் கருதுகிறேன்.

பேராசிரியர் கணினியில் தட்டச்சு செய்யவும் நூல் பக்க வடிவமைப்பு செய்யவும் கணினியில் தொடரடைவு உருவாக்கவும் கற்றுக்கொடுத்தவர். எமது பேராசிரியரோடு செம்மொழித்தமிழ், பெருங் கதை தொடரடைவு, பதினெண்கீழ்க்கணக்கு நூல் சொல்லடைவு போன்ற பணிகளைச் செய்திருக்கிறேன். இவற்றால் கற்றவை ஏராளம்.

ஒரு அகராதியை எப்படி உருவாக்க வேண்டும் பொது நூல் எப்படி படைக்க வேண்டும் என்பதை எல்லாம் மிகத் தெளிவாகக் கற்றுணர்ந்தேன். வட்டார வழக்கு சொற்களை எப்படி ஒரு பொது அகராதியில் சேர்ப்பது என்பதையும் மிகச் சிறப்பாக உணர்ந்தேன்.

### தந்தையாக தாயாக

ஒரு தந்தையாக ஒரு தாயாகச் செயல்பட்டவர். தேவைக்கு மட்டுமே செலவு செய்து சிக்கனமாக வாழவேண்டும் என்னும் அறிவுரையைக் கூறியவர்.

குடும்ப வாழ்க்கையில் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து அனுசரித்துச் செல்ல வேண்டும் என்னும் அறிவுரையைத் திருமணப் பத்திரிகை வைத்த போது வழங்கியவர்.

**செயற்கரிய செய்வார் பெரியர்!**
**பேராசிரியரின் பெருமை போற்றுவோம்!**

Published on 14, April - June 2026 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# அகராதி - படித்த எல்லாருக்கும் பிடித்தப் பேராசிரியர் வ. ஜெயதேவன்

**முனைவர் அரு. அபிராமி**
உதவிப் பேராசிரியர், தமிழ்த் துறை
சோகா இகெதா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி,
சென்னை -99

*அகராதி என்பதற்கு அகராதிகள் அகர வரிசை நிரலில் சொற்களுக்குப் பொருள் தரும் சொல் தொகுதி என்று பொருள் தரும். ஆனால் நாங்கள் நேரில் கண்டு பேசி உரையாடி பார்த்த கலை களஞ்சியம் எங்கள் ஐயா.*

*ஒரு சொல்லை அகராதிக்கு எவ்வாறு தேர்வு செய்யவேண்டும். அதற்கான இலக்கணக் குறிப்புகளை எவ்வாறு கண்டுபிடிக்க வேண்டும். ஒரு புதிய நூலை எவ்வாறு வாசிக்க வேண்டும் வாசித்தவற்றிலிருந்து புதிய சொற்களை எப்படி உருவாக்குதல் வேண்டும் என்பதை எளிய முறையில் எம் போன்றோர்களுக்குச் சொல்லித் தந்த பெருந்தகையாளர் போற்றுதலுக்கும் வணக்கத்திற்குரிய ஐயா.*

*சென்னைப் பல்கலைக்கழகத்தில் இதுவரையிலும் படித்த எல்லாருக்கும் பிடித்தப் பேராசிரியர்.*

***2005**ஆம் ஆண்டு இளங்கலை முடித்து வரலாற்றுச் சிறப்புமிக்க சென்னைப் பல்கலைக்கழக மொழித்துறையில் முதுகலைப் படிக்க ஆசைப்பட்ட போது அந்த கனவை நினைவாக்க உதவிப் புரிந்த கெழுதகையாளர். தொடர்ந்து கல்வி பயில உதவியவர் ஐயா.*

*பல்கலைக்கழகங்களில் அகராதியியல் துறைகள் உருவாக்கப்பட வேண்டும். ஐயாவின் நூல்கள், அகராதிகள் பாடங்களாக வேண்டும் ஐயாவின் மாணவியாக விரும்புகிறேன். காலம் நல் வாய்ப்பை உருவாக்கும் என்றும் நம்புகிறேன்.*

International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

Published on 14, April - June 2026 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# நட்டம் அவருக்கில்லை

**முனைவர் சொ.மகாதேவன்**
தமிழ்த்துறைத் தலைவர் (ஓய்வு)
சர் தியாகராயர் கல்லூரி, சென்னை - 21

பெரும் பேராசிரியர் வ.ஜெயதேவன் ஐயா அவர்களின் துறைப்பணிகள், பல்கலைக்கழகப் பணிகள், பதிப்புப்பணிகள் இன்னபிற பணிகள் குறித்து நாம் அனைவரும் அறிந்திருக்கிறோம். ஆனால், அவர் மாணவர்களிடம் கொண்டிருந்த ஆழ்ந்த அன்பு, வாஞ்சை குறித்தும் அவர்களது அறிவு வளர்ச்சி, திறன் வளர்ச்சி, வாழ்வியல் முன்னேற்றம், வேலைவாய்ப்பு, குடும்ப வாழ்வு மேம்பாடு, மனித உறவுகளைப் பேணுதல் சமூகப் பொறுப்புணர்வு ஆகியன குறித்தெல்லாம், அவரது உள்ளத்தோடு கலந்து, நிழல்போல் உடனிருந்து பயன்பெற்ற ஒரு சில மாணவர்களால் மட்டுமே கூற முடியும்! அவ்வகையில் ஒரு மாணவனாக, கட்டுரையை அமைத்துக் கொள்கிறேன்.

1988-89ஆம் கல்வியாண்டில், நான் இளம் ஆய்வியல் மாணவராகத் தமிழ் மொழித்துறையில் சேர்ந்தபோது, அவர் எங்களுக்கு வகுப்பெடுத்தார். ஒரு மணி நேர வகுப்பை எப்படிக் கட்டமைத்துக் கொள்ள வேண்டும், செய்திகளை எப்படி நிரல்படுத்திக் கொள்ள வேண்டும், எந்த அளவுக்குக் கரும்பலவையைப் பயன்படுத்தவேண்டும் என முறைப்படி வகுத்துக் கொண்டதாக அவரது வகுப்பறைச் செயல்பாடு இருக்கும்.

துறைக்கூட்டத்தில் மாணவர்களுக்கான ஆய்வு நெறியாளர்களை ஒதுக்கும்போது, எனது நல்வாய்ப்பாக ஐயா அவர்கள் எனக்கு நெறியாளராக அமைந்தார். அவரிடம் நெருங்கிப் பேசவே நாங்கள் தயங்கினோம். மாணவர்களுக்கு ஆய்வுத் தலைப்புகளை முடிவு செய்யும்போது, தமது விருப்பத்தையோ கருத்தையோ ஒருபோதும் திணித்ததில்லை! என்னைப் பார்த்து “என்னென்ன தலைப்புகளில் ஆய்வு செய்ய விரும்புகிறீர்களோ அவற்றில் மூன்று தலைப்புகளை மட்டும் முடிவு செய்துகொண்டு, அவற்றின் இயல் பகுப்பு மற்றும் துணைத் தலைப்புகளுடன், இரண்டு பக்க அளவில் எழுதிக் கொண்டு வாருங்கள்” என்று கூறினார்.

நானும் அவ்வாறே செய்தேன். அவற்றுள் எந்தத் தலைப்புக்குத் தகவல்கள் கிடைக்கும்? எது காலத்தில் முடிக்க முடியும்? எதிர்காலங்களிலும் ஆய்வு செய்யவோ கட்டுரைகள் எழுதவோ எது உதவும்? எது நம்மைத் தனித்துவப்படுத்துதுடன் பின்னாளில் நம்மை, ஒரு துறைசார் வல்லுனராக அடையாளப்படுத்தி, புகழ் பெறச் செய்யும்? என்றெல்லாம் கூறிக் கலந்துரையாடி, ஒரு தலைப்பை இறுதி செய்து தந்தார்கள்.

எங்களது ஆய்வேடுகள் ஒவ்வொன்றையும், அவர் கட்டாயம் திருத்துவார். அப்போது எங்களை உடனமர்த்திக் கொண்டு, வரிக்கு வரி சிறப்பாகத் திருத்தித் தருவார். குற்றம் குறைகள் அதிகம் இருக்கும் ஏடுகளைத் திருத்தும்போது 'நெய்த நூலை விடத் தைத்த நூலே அதிகமாக இருக்கிறது' என்று நகைச்சுவையாக உணர்த்துவார்.

என்னைத் திருவல்லிக்கேணியில், ஒரு பதிப்பகத்தில், பகுதிநேர வேலைக்குச் சேர்த்து விட்டார். அதோடு, சென்னை வானொலி, சென்னைத் தொலைக்காட்சி போன்றவற்றில் நிகழ்ச்சிகள் வழங்கவும் பகுதி நேரப் பணிகள் செய்யவும் ஊக்குவித்தார். நான் கல்வித் துறையில் ஆய்வுகள் செய்ததால், என்னை வயது வந்தோர் கல்வித்துறையினருக்கு அறிமுகம் செய்துவைத்து, அவர்களது ஆய்வுத்திட்டங்களில் என்னைப் பங்கேற்கச் செய்தார். ஆய்வு நிறைவடையும் காலத்தில் சென்னை, சர். தியாகராயர் கல்லூரியில் மாலை நேர ஆசிரியராகப் பணிபுரிய வழியேற்படுத்தித் தந்தார்.

பெரும்பேராசிரியர் அவர்கள், பதிப்புத்துறை இயக்குநராகக் கூடுதல் பொறுப்பு ஏற்றிருந்த போது, அங்கே விற்காமல் குவித்து வைக்கப்பட்டிருந்த நூல்களை விற்பனை செய்ய, ஒரு சிறப்புத் திட்டத்தைக் கொண்டுவந்தார். ஆய்வு மாணவர்களைப் பல்கலைக்கழக நூல் விற்பனைப் பிரதிநிதிகளாக நியமித்து, அந்த நூல்கள் எல்லாம் விற்றுத் தீர ஏற்பாடு செய்தார். பதிப்புத்துறை இயக்குனராகப் பணியாற்றிய காலத்தில் நான் பதிப்பு உத்திகள் அனைத்தையும் கற்றுக் கொண்டேன்.

துறைசார்ந்த கருத்தரங்குகள் மற்றும் அறக்கட்டளைச் சொற்பொழிவுகள் நடக்கும்போது, அது எங்களுக்கு மிகச் சிறந்த பயிற்சிப் பட்டறையாகவும் திருவிழாவாகவும் அமையும். கருத்தாளர்களைத் தேர்வு செய்தல், அழைப்பிதழ் தயார் செய்தல் முதல், அவர்களது நூலாக்கம் செய்தல் வரை அத்தனை வேலைகளையும் எங்களிடமே ஒப்படைத்துவிட்டு, அதனை மேற்பார்வையிடுவார். தம் மாணவர்களோடு தாமும் ஒரு மாணவராக – ஒரு படி மேலாக - ஒரு நல்ல நண்பராக இருந்து, அந்த நிகழ்ச்சிகள் அனைவரது உள்ளங்களிலும் நின்று நிலைக்குமாறு பார்த்துக் கொள்வார்!

எந்தத்துறை குறித்தும் அவரிடம் ஐயங்கள் ஆலோசனைகள் கேட்கலாம் சரியான வழி காட்டுவதோடு அங்கு இருக்கும் தனது நண்பர்களையும் அறிமுகம் செய்து உதவுவார். பேராசிரியர் அவர்கள் மகிழ்ச்சியில் துள்ளியதும் இல்லை: துன்பங்களில் துவண்டதும் இல்லை!

கணிப்பொறி அறிமுகமான அக்காலகட்டத்தில், அதில் ஒவ்வொரு எழுத்தாகத் தட்டித்தட்டி, கணினித் தமிழ் தட்டச்சுப்பயிற்சியைத் தாமே கற்றுக்கொண்டார். அதோடு கணிப்பொறியின் 'மொழிப் பயன்பாட்டுத் தொழில் நுட்பங்கள்' அனைத்தையும் தானே கற்றுத் தேர்ந்து, அதிலும் விற்பன்னரானார். எப்போதும் சிந்தித்துக் கொண்டே இருந்தவர் இப்போது தமது சிந்தனையை நிறுத்திக் கொண்டார். ஒன்று மற்றும் உறுதி! நட்டம் அவருக்கில்லை!

International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

Published on 14, April - June 2026 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# தமிழ் மணக்கும் சொற்பூங்கா
# பேராசிரியர் வ. ஜெயதேவன்

முனைவர் ந. ஆனந்தி

எழுதுகோலை இறுக்கிப் பிடித்திருக்கும் என்
விரல்களுக்குத் தெரியாது,
எழுதும் கலையைக் கற்றுத் தருவதை
அறியாமலே கற்றுத்தந்த ஆசானுக்கான
இரங்கல் கவிதையை வடிப்போமென்று.

நண்பருக்கான கவிதை ஒன்றை நவில்க
என்று கூறிய எம் ஆசானுக்குத்
தெரியாது,
கொடுங்காலன் அவருக்கான கவிதை
வரையச் சொல்ல, நேரம் பார்த்து
இருந்தான் என்று.

நாளுக்கான துவக்கத்தைச் சொல்லி எழுப்பும்
கதிரவனுக்குத் தெரியாது,
விடியலையே பலருக்கு இருட்டாக்கிப்
போகவைக்கும்
வேதனையைத் தருவோம் என்று.

அவர் அன்றாடம் படித்திடும்
செய்தித்தாள்களுக்கும் நூல்களுக்கும்
தெரியாது,
இனி விரைந்து படிக்கும் ஆற்றல் மிக்க
வாசகர் ஒருவர்,
தம்மைப் புரட்டி மகிழ்ந்திட இல்லை என்று.

அவருக்காக அடுக்கி வைத்த அகராதிப்
பணிகளுக்கும், கலைக்
களஞ்சியத்துக்கும் தெரியாது,
ஆழ்ந்த புலமை நலம் கொண்ட ஓய்வறியா
அகராதியியலாளர்
நிரந்தர ஓய்வு எடுத்துக் கொண்டார் என்று.

ஆன்ற தமிழறிஞர்களுக்கும்
ஆய்வாளர்களுக்கும் தெரியாது,
அறிவார்ந்த உரைகளையும், ஐயங்களுக்கான
விளக்கங்களையும்
தடையின்றி வழங்கும் நாவுக்குத் தடை
விழுந்ததென்று.

முகநூலில் வெளிவந்த மொழிபெயர்ப்புக்
கவிதைகளுக்குத் தெரியாது,
இனி இதுபோல் தமிழாக்கம் செய்யும்
இருமொழிப் பாவலர்
இயக்கத்தை நிறுத்திக்கொண்டார் என்று.

நாள்தோறும் அவர் சேர்த்து வைத்த புதிய
தமிழ்ச் சொற்களுக்குத் தெரியாது,
நம்மை அகராதியில் சேர்ப்பித்து, நிலைபெறச்
செய்வார்,
நிலையான உறக்கத்தில் ஆழ்ந்து
போனாரென்று.

அளவற்ற அன்புகொண்ட அவர்
மாணவர்களுக்குத் தெரியாது,
தமிழ் உலகில் தங்களை நிலைநிறுத்திய
பெரும் பேராசான்,
தங்களை முகவரி அற்றுப் போகச் செய்வார்
என்று.

ஆயிரம் கதைபேசிய அன்பான
உறவுகளுக்குத் தெரியாது,
ஆழ்ந்த வெற்றிடத்தினை உருவிக்கிவிட்டு,
ஆழ்ந்த உறக்கத்தில் அவர் மூழ்கிப் போவார்
என்று.

அத்தனை பேருக்கும் அன்று தெரியவைத்த
காலமே!
எந்த அகராதியை முடிக்க, ஆசானை
உன்னுள் மறைத்தாய்!
தமிழ் மணக்கும் சொற்பூங்காவாக
தமிழுலகில் நிலைபெற்று அவரிருக்க,
மறைந்தார் என்று நீ கூறுவதெல்லாம்
பொய்யாகிப்போகாதோ!